

## இதில் சேர்வது சுலபமானது.

முதலாவது மாடியில் இயங்கும் பதிவுப் பிரிவில் காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை நேரில் வந்து பதிவு செய்துகொள்ளுங்கள். நீங்கள் இரண்டு அடையாளச் சான்றுகளையும் உங்கள் குழந்தையின் OHIP அட்டையையும் எடுத்துவர வேண்டும்.


கூடுதல் தகவல்களுக்குத் தொடர்புகொள்ளவும்:
தொலைபேசி: 416-425-6220 நீட்டிப்பு. 3881
மின்னஞ்சல்:
connect2care@hollandbloorview.ca


hollandbloorview.ca/connect2care


## Holland Bloorview Kids Rehabilitation Hospital

Holland Bloorview Kids Rehabilitation Hospital ஆனது இயலாமையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் வாழ்க்கையை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகின்ற கனடாவின் மிகப்பெரிய குழந்தைகள் மறுவாழ்வு மருத்துவமனை ஆகும்.

ஹாலந்து ப்ளூர்வியூ பயனுறு ஆராய்ச்சி, கற்றல் மற்றும் கற்பித்தல் மற்றும் வாடிக்கையாளர் மற்றும் குடும்பத்தை மையப்படுத்திய பராமரிப்பு ஆகியவற்றில் உலகளவில் முன்னணி பெற்று விளங்குகிறது.

பெருமூளை வாதம், மூளையதிர்ச்சி உள்ளிட்ட பெறப்பட்ட மூளைக் காயம், தசைச்சிதைவு, உறுப்புத் துண்டிப்பு, வலிப்பு, ஸ்பைனா பிஃபிடா, கீல்வாதம், உதடு மற்றும் அண்ணப் பிளவு, ஆட்டிசம் மற்றும் இதர உடல் ரீதியான மற்றும் வளர்ச்சி சார்ந்த இயலாமைகள் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்காக ஒரு மாகாண வளமாற்றப் பராமரிப்பை நாங்கள் வழங்குகிறோம்.

இயலாமையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஒரு சாத்தியமான உலகத்தை உருவாக்குவது எங்கள் நோக்கம் ஆகும்.





**Holland Bloorview Kids Rehabilitation Hospital**
150 Kilgour Road, Toronto, ON M4G 1R8
T: 416-425-6220 Toll-Free: 800-363-2440
F: 416-425-6591 E: info@hollandbloorview.ca


hollandbloorview.ca


[1289.16]


# connect2care

பதிவு செய்யுங்கள் I
தகவல் தெரிந்துகொள்ளுங்கள் I
தொடர்பில் இருங்கள்

**உங்களுடைய உடல்நலப் பராமரிப்பு பற்றிய தகவல் உங்கள் விரல்நுனிகளில்.**

இன்றே பதிவு செய்யுங்கள்.



Holland Bloorview
Kids Rehabilitation Hospital

**connect2care என்பது வாடிக்கையாளர்களும் குடும்பங்களும் தங்களுடைய உடல்நலப் பராமரிப்புத் தகவல்களை ஒரு சில கிளிக்குகள் மூலம் 24/7 நேரமும் மதிப்பாய்வு செய்து நிர்வகிக்க உதவுகின்ற ஒரு ஆன்லைன் கருவி ஆகும்.**

**hollandbloorview.ca/connect2care** இல் உள்நுழையவும்.

இவற்றுக்கு இன்றே பதிவு செய்யுங்கள்:

- உங்களுடைய எதிர்கால முன்பதிவுச் சந்திப்புகளை நிர்வகிக்க
- உங்களுடைய உடல்நலப் பராமரிப்புப் பதிவேடுகளை அணுகுவதற்கு
- உங்களுடைய உடல்நலப் பராமரிப்பு அணியுடன் தொடர்புகொள்வதற்கு

“இது மிகவும் வியப்புக்குரியது மற்றும் பயனுள்ளது.”

“இந்தப் பிணைப்பிலிருந்து விடுபடுவதற்கு என்னால் காத்திருக்க முடியாது.”

“என்னுடைய வருகை வரலாற்றை மீளாய்வு செய்வது எங்கள் வாழ்க்கையின் ஹாலந்து ப்ளூர்வியூ எந்தளவுக்குப் பங்கேற்றுள்ளது என்பதை எனக்கு நினைவுபடுத்துகிறது. நாங்கள் மிகவும் நன்றிக் கடன்பட்டிருக்கிறோம்!”

## உங்கள் உடல்நலப் பராமரிப்புப் பதிவேடுகள் உங்களைச் சார்ந்தவையாகும்.

தங்கள் உடல்நலப் பராமரிப்பை நிர்வகிப்பதிலும் தகவலறிந்த முடிவுகளை எடுப்பதிலும் வாடிக்கையாளர்களும் குடும்பங்களும் ஒரு செயலுறு முடிவெடுப்பதற்கு connect2care அவர்களுக்கு அதிகாரமளிக்கிறது.

## உங்களுக்குத் தேவைப்படும்போது தேவைப்படுகின்ற இடத்தில் தகவல் கிடைக்கிறது.

வீட்டில், பள்ளியில், விடுமுறையில் இருக்கும்போது அல்லது வேறொரு மருத்துவ அலுவலகத்திலிருந்து நீங்கள் ஆன்லைனை அணுகும் இடங்களில் எல்லாம் உங்களுக்குத் தேவையானபோது connect2care-ஐ அணுகவும். நீங்கள் உங்கள் பராமரிப்பை நாளொன்றுக்கு 24 மணிநேரமும், வாரத்துக்கு ஏழு நாட்களும் நிர்வகிக்க முடியும்.

## எப்பொழுதுமே சமீபத்திய தகவல்களைத் தெரிந்து வைத்திருங்கள்.

எப்பொழுதுமே ஒரு காகிதக் கோப்பினைக் கையில் எடுத்துச்செல்வதை விட உங்கள் தகவல்களை ஆன்லைனில் அணுகுவது நீங்கள் எப்பொழுதும் மிகத் துல்லியமான மற்றும் புதுப்பிக்கப்பட்ட தகவல்களை உங்கள் விரல் நுனியில் வைத்திருப்பதை உறுதி செய்கிறது.

## என்னுடைய உடல்நலத் தகவல்கள் எங்கிருந்து கிடைக்கின்றன?

இந்தப் போர்ட்டலில் உள்ள எல்லாத் தகவல்களும் உங்களுடைய ஹாலந்து ப்ளூர்வியூ மின்னணு உடல்நலப் பதிவேட்டிலிருந்து கிடைக்கின்றன.




## யாரெல்லாம் இந்த போர்ட்டலை அணுக முடியும்?

ஹாலந்து ப்ளூர்வியூ மருத்துவர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் அவர்களுடைய பெற்றோர்கள் அல்லது சட்டரீதியான பாதுகாவலர்கள் ஆகியோர் மட்டுமே connect2care க்கான அணுகலைப் பெற்றிருப்பார்கள்.

## என்னுடைய தனியுரிமை பாதுகாக்கப்படுமா?

ஆம். உங்களுடைய தனிப்பட்ட தகவலைப் பாதுகாப்பதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். ஒண்டாரியோவின் தனிப்பட்ட உடல்நலத் தகவல் பாதுகாப்புச் சட்டத்தை நாங்கள் பின்பற்றுகிறோம், எனவே connect2care ஆனது தனியுரிமை மற்றும் பாதுகாப்புக்கான உத்தரவாதத்தைப் பெற்றுள்ளது. உங்களுடைய தனிப்பட்ட கடவுச்சொல்லையும், உள்நுழைவுத் தகவல்களையும் நீங்கள் வேறு யாருடனும் ஒருபோதும் பகிர்ந்துகொள்ளக்கூடாது என்பதும் மிகவும் முக்கியமாகும்.

## இதர உடல்நலப் பராமரிப்பாளர்களிடமிருந்து பெறப்படும் தகவல்களை நான் பார்க்கலாமா?

இல்லை. connect2care ஆனது ஹாலந்து ப்ளூர்வியூவில் நடக்கின்ற முன்பதிவுச் சந்திப்புகள் மற்றும் சேவைகள் பற்றிய தகவல்களை மட்டுமே கொண்டிருக்கும்.

## நான் என்னுடைய உடல்நலப் பராமரிப்பாளருடன் தொடர்புகொள்ளும் முறையை connect2care எப்படி மேம்படுத்தும்?

connect2care இல் செய்தி அனுப்பும் அம்சத்தைப் பயன்படுத்தி இரண்டு வருகைகளுக்கிடையே உங்கள் உடல்நலப் பராமரிப்பாளருக்கு செய்திகளை அனுப்புகிறது மற்றும் பெறுகிறது.

## ஏதேனும் தொழில்நுட்பப் பிரச்சனைகள் ஏற்பட்டால் என்ன செய்வது?

போர்ட்டலைப் பயன்படுத்துவது தொடர்பாக தொழில்நுட்பப் பிரச்சனைகளை நீங்கள் எதிர்கொண்டால் எந்த நேரத்திலும் 416-425-6220 நீட்டிப்பு 3881 இல் அல்லது connect2care@hollandbloorview.ca இல் எங்களைத் தொடர்புகொள்ளவும். இரண்டு வேலை நாட்களுக்குள் நாங்கள் உங்களைத் தொடர்புகொள்வோம்.

This document was client & family reviewed™